இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 167 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 14 – புதன்கிழமை 28 ஜனவரி 2026 – வெளியீூ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 167 : Thiruvalluvar Year - 2057 - Thai 14 - Wednesday 28 January 2026 - Dak 16 Pages ₹ 5.00



தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.1.2026) நடைபெற்ற ‘‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’’ கழக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான கழக மகளிர் அணித் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## மீண்டும் எடுபிடிகளை வைத்துக் கொண்டு – டெல்லியிலிருந்தே தமிழ்நாட்டை ஆளலாம் என பா.ஜ.க. நினைக்கிறது!

# எந்த ‘கெட் - அப்’ பில் வந்தாலும் - உங்களுக்கு ‘கெட் அவுட்’ தான்!

## தஞ்சையில் டெல்டா மண்டல மகளிரணி மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**தஞ்சை, ஜன.28-**

**நடக்கப் போகும் தேர்தல், மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி vs NDA கிடை யாது... தமிழ்நாடு vs NDA எனவும் மீண் டும் எடுபிடிகளை வைத்துக் கொண்டு, டெல்லியில் இருந்தே தமிழ்நாட்டை ஆளலாம் என்று பா.ஜ.க. நினைக்கிறது. இனி எந்த ‘கெட்–அப்’பில் வந்தாலும் உங் களுக்கு “கெட் அவுட்”–தான் என்றும் தஞ்சையில் நேற்று முன்தினம் (26.01.2026) நடைபெற்ற வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல மகளிரணி மாநாட்டில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றினார்.**

**கழகத் தலைவர் – முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.1.2026) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” கழக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில், கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், துணைப் பொதுச்செயலாளர்கள் – சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ். ரகுபதி, எஸ்.எஸ். சிவசங்கர், மு.பெ. சாமிநாதன், முனைவர் கோவி செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், சி.வி. கணேசன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மகளிர் அணித் தலைவர் திருமதி விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் இராணி, தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மாவட்டச் செயலாளர்கள், கழக மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இராணுவப் படையை, ‘ஃபோர்ஸ்’ என்று சொல்வார்கள். இங்கு நான் நுழைந்தவுடன், உங்களைப் பார்த்த போது, கருப்பு மற்றும் சிவப்பு ‘டெல்டா ஃபோர்ஸ்’ என்று சொல்லத்தக்க வகையில், இராணுவப் படை போன்று மிடுக்காகத் திரண்டிருக்கும் என் அன்புச் சகோதரிகளான உங்களுக்கு என் முதல் வணக்கம்!

**கருப்பு – சிவப்பு கடல்போன்று திரண்டிருக்கிறீர்கள்!**

வீட்டை மட்டுமல்ல - கழகத்தையும் நாங்கள் காப்போம் என்ற உணர்வோடு கருப்பு - சிவப்பு கடல்போன்று திரண்டிருக்கிறீர்கள்!

வீட்டையும் - கழகத்தையும் மட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டையும், ஏன் இந்திய நாட்டையும் காப்பதற்கு நாங்கள் தயார். யாருக்கும் நாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்ற துணிச்சலுடன் திரண்டிருக்கிறீர்கள்!

தஞ்சை மண், கம்பீரமான மண்! மன்னர்களுக்கு எல்லாம் மன்னரான, ராசராச சோழன் ஆட்சி செய்த சோழ மண், இந்த மண்! கம்பீரமாய் நிற்கும் பெரிய கோயிலும் - காலங்கள் கடந்தும் உறுதியாய் நிற்கும் கல்லணையும் நிலைத்து நிற்கும் மண், இந்த தஞ்சை மண்!

**தமிழ்நாட்டின் நவீனச் சிற்பி கலைஞரைத் தந்த மண் இது!**

நவீனத் தமிழ்நாட்டின் சிற்பியான - நம் உயிர்நிகர்த் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரைக் கொடுத்த மண், இந்த மண்! ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் பிறந்து, காவிரி நீரைக் குடித்து வளர்ந்தவர், நம்முடைய தலைவர் கலைஞர்! ஏன், நானும் டெல்டா காரன்தான்!

இந்த மாநாட்டை எழுச்சியோடும் - உணர்ச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கிறார், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர், என் அன்புத் தங்கை கனிமொழி அவர்கள்! தங்கை கனிமொழி அவர்களிடம் ஏதாவது ஒரு பொறுப்பை ஒப்படைத்தால், அதை அமைதியாகவும் சிறப்பாகவும் செயல்படுத்திக் காண்பிப்பார் என்பதற்கு இந்த மாநாடும் ஒரு எடுத்துக்காட்டு! கழகப் பணிகளில்தான் இந்த அமைதி; உரிமைக் குரல் எழுப்ப வேண்டிய நேரத்தில் கர்ஜனைமொழியாக மாறிப் போராடுவார், அதுதான் கனிமொழி! அவருக்கு என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!

**அசகாயசூரர் நேருவுக்கு வாழ்த்துகள்!**

அதேபோன்று, இந்த மண்டலத்தின் பொறுப்பு அமைச்சர் - முதன்மைச் செயலாளர் - என்னுடைய அன்புச் சகோதரர் - “திருச்சி தந்த தீரர்” கே.என். நேரு. கழகத்தை வளர்ப்பதில் - எழுச்சிமிக்க மாநாடுகளை நடத்துவதில் - மக்களை திரட்டுவதில் - அசகாய சூரர் அவர்! அவருக்கும் - மகளிரணி நிர்வாகிகளுக்கும் - மாவட்டக் கழகத்தின் செயலாளர்களுக்கும் - கழக முன்னணியினருக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

பல்லடத்தில் தீபமாய் ஒளிர்ந்த இந்த வெல்லும் தமிழ்ப் பெண்கள் மாநாடு, இப்போது தஞ்சையில் தகதக என்று மின்னுகிறது! தஞ்சை என்பது, திராவிட இயக்கத்தின் கோட்டை! வெல்லும் தமிழ்ப் பெண்களே... கழகத்தை காக்க வேண்டிய கடமை - தமிழ்நாட்டை வளர்க்க வேண்டிய கடமை - உங்களுக்குத்தான் நிறைய இருக்கிறது! சாதி ஆதிக்க ஒழிப்பு மட்டுமே திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கம் இல்லை! பெண் விடுதலையும்தான் நம்முடைய அடிப்படை! சாதியால் உயர்வு - தாழ்வு இல்லை என்பதற்காகவும் - ஆண் உயர்ந்தவன் - பெண் தாழ்ந்தவர் என நினைப்பதும், நடத்துவதும் தவறானது என்பதை உணர்த்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய திராவிட இயக்கம். “சூத்திரர்களைப் போன்று பெண்களும் இழிவானவர்கள்” என்று ஒடுக்கப்பட்ட காலத்தில், இந்த இருவரின் விடுதலைக்காகவும் வாழ்நாளெல்லாம் உழைத்தார் தந்தை பெரியார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### கனிமொழிக்கு பாராட்டும் - வாழ்த்தும்!



**இந்த மாநாட்டை எழுச்சியோடும் – உணர்ச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கிறார், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர், என் அன்புத் தங்கை கனிமொழி அவர்கள்! தங்கை கனிமொழி அவர்களிடம் ஏதாவது ஒரு பொறுப்பை ஒப்படைத்தால், அதை அமைதியாகவும் சிறப்பாகவும் செயல்படுத்திக் காண்பிப்பார் என்பதற்கு இந்த மாநாடும் ஒரு எடுத்துக் காட்டு! கழகப் பணிகளில்தான் இந்த அமைதி; உரிமைக் குரல் எழுப்ப வேண்டிய நேரத்தில் கர்ஜனைமொழியாக மாறிப் போராடுவார், அதுதான் கனிமொழி! அவருக்கு என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!**